**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 -ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2053, ஸ்ரீ சோபகிருது வருடம், மார்கழி மாதம் 16 - ம் நாள்**
**இ.ம.எண். 10/2023 இன் மூ.வ.எண். 47/2020**

பாலசுப்பிரமணியன் ...மனுதாரர்/வாதி

... எதிர் ...

1. சரோஜா
2. சார்பதிவாளர், திருப்புவனம் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 22.12.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.வீரபாண்டி அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 -ம் பிரதவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ராமநாதன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/2 -ம் பிரதவாதி தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரி மனுதாரரால் மனு தாக்கல்.

**1. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

அ) வாதி அசல்வழக்கில் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 முதல் 6 வரை ஆவணங்களின் அசல் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 8, 9,10 ஆவணங்கள் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:-**

மனு ஆட்சேபிக்கப்படுகிறது. மனுவில் கூறியுள்ள விசயங்கள் ஆட்சேபிக்கப்படுகிறது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 5, 8 ம் இலக்க ஆவணங்கள் இவ்வழக்குடன் சம்மந்தப்பட்டவை அல்ல. மற்ற ஆவணங்கள் அதன் செல்லும் தன்மையைப் பொறுத்தே அனுமதிக்க இயலும். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை ஏற்றுக் கொள்ளக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. வழக்கு விசாரணை ஆரம்பித்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுவை

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.01.02 16:09:51 +0530

தள்ளுபடி செய்யக் கோரி எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

**5.** அசல்வழக்கானது 2020 ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை பட்டியலில் இடப்பட்டு வாதிதரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், ஆவணங்களின் செல்லும் தன்மை குறித்து வழக்கு விசாரணை இறுதியில்தான் முடிவு செய்ய முடியும் என்ற நிலையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, மனுதாரர் மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 -ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.01.02 16:10:11 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:- இல்லை.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.01.02 16:10:28 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**